Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 175 | உள்ளூர் - 24.06.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 175 | வெளியூர் - 25.06.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| குழந்தை வரம் அருளும் மகத்தான பரிகாரம்! | புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்! | பத்திரப் பதிவில் அதிரடி மாற்றம்! | தி.மு.க. எதிர்ப்பை கைவிட்ட பழனிசாமி! |




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், எரிசக்தித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்) மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் அணில் மேஷ்ராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, தியாகராய நகரில், கவியரசு கண்ணதாசன் 100–வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி. வெங்கடரமணன், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ. மரிய வில்சன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா. குமார், சட்டமன்ற உறுப்பினர் எஸ். தியாகராஜன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை/தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர்(பொ) வ.தட்சிணாமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அ.அருண் தம்புராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தென்மண்டலத்தில் ஆப்ரேசன் ஷீல்டு

# 2441 பிடிவாரண்ட் 687 போதை குற்றவாளிகள்

## அதிரடி கைது!

சென்னை, ஜூன். 24–

10 மாவட்டங்களில் ஆப்ரேசன் ஷீல்டு நடவடிக்கை மூலம் 2441 பேருக்கு பிடிவாரண்ட், கஞ்சா, புகையிலை விற்பனையில் ஈடுபட்ட 687 குற்றவாளிகள் கைது – தென்மண்டல ஐஜி தகவல்.

**10 மாவட்டங்களில் ஆபரேஷன் ஷீல்டு**

மதுரை தென்மண்டல காவல்துறைக்கு உட்பட்ட மதுரை, தேனி ,திண்டுக்கல், ராமநாதபுரம் சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் ஆபரேஷன் ஷீல்டு என்ற நடவடிக்கை மே 20 ஆம் தேதி முதல் நடைபெற்றது.




இந்த ஆப்ரேசனில் 2,441 பேருக்கு பிடியாணை கள் பிறப்பிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ளது. 694 பேரின் ஜாமீன் ரத்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 497 வழக்குகளில் 687 போதைப்பொருள் குற்றவாளி கள் கைது. தடை செய்ய ப்பட்ட கஞ்சா, குட்கா புகையிலை விற்பனை செய்த வழக்குகளில் 682 குற்றவாளிகள் கைது .

401 கிலோ கஞ்சா மற்றும் 4,458 கிலோ சட்டவிரோத புகையிலைப் பொருட்கள் பறிமுதல். பல்வேறு விதிமீறல்களுக்காக 55,336 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், சொத்து பிரச்சனை தொடர்பாக BNSS பிரிவு 164–ன் கீழ் 127 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ள 365 பேரிடம். நன்னடத்தைக்கான பிணைப் பத்திரம் பெறப்பட்டு குற்ற தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக தென் மண்டல காவல்துறை ஐஜி விஜயேந்திர பிதாரி தகவல்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில் எரிசக்தி துறை சார்பில் நடைபெற்ற 401 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் நிகழ்வில், நிறைமாத கர்ப்பிணிக்கு மேடையில் இருந்து கீழே இறங்கி சென்று முதலமைச்சர் பணி நியமன ஆணை வழங்கினார்.

## ராமதாஸை சந்தித்தார் அன்புமணி.. தந்தை- மகன் மோதல் முடிவுக்கு வந்ததா..?





சென்னை, ஜூன். 24–

தைலாபுரம் தோட்டத்து வீட்டில் ராமதாஸை அன்புமணி சந்தித்து பேசினார்.. தந்தை ராமதாஸின் திருமண நாளை முன்னிட்டு குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து அன்புமணி ஆசீர்வாதம் பெற்றார்..

நீண்ட இடைவெளிக்கு பின்னர் தனது தந்தை ராமதாஸ் உடன் அன்புமணி சந்திப்பு நிகழ்ந்துள்ளது.. இந்த சந்திப்பின் மூலம் தந்தை மகன் இடையேயான பூசல் முடிவுக்கு வந்துள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.. 2 ஆண்டுகளாக இந்த மோதல் நீடித்த நிலையில் தற்போது முடிவுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது..

## எல்-நினோ அபாயம்.. தமிழகத்தின் 12 மாவட்டங்களுக்கு வறட்சி பாதிப்பா..?



சென்னை, ஜூன். 24–

எல்–நினோ தாக்கத்தால் தமிழகம் உட்பட 27 மாநிலங்களில் உள்ள 226 மாவட்டங்களில் வறட்சிப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய, கிழக்கு பசிபிப் பெருங்கடலின் மேற்பரப்பு நீர் வழக்கத்தை விட அதிக வெப்பமடையும் ஒரு இயற்கையான காலநிலை நிகழ்வு எல்– நினோ என்று அழைக்கப்படுகிறது. இது மழைப் பொழிவு, வெப்ப நிலை முறைகளை மாற்றி, குறிப்பிட்ட பகுதிகளில் கடுமையான வறட்சியையும், இதர பகுதிகளில் பெருமழையையும் உருவாக்கும் என்று கூறப்படுகிறது.

**அதிகரிக்கும் வெப்பநிலை**

பசுபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை பொதுவாக 26 முதல் 28 செல்சியஸ் டிகிரியாக இருக்கும். இந்த வெப்ப நிலையில் இருந்து 0.5 கூடினால் எல் நினோ உருவானதாக அர்த்தம். தற்போது பசுபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகமாக உள்ளன. அடையாளக் குறியீடு 28 செல்சியஸ் டிகிரியில் இருந்து 0.5 அதிகரித்துள்ளன.

ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை காலாண்டில் மிதமான முதல் வலுவான எல்நினோ நிலையை காட்டுகின்றன. தற்போதைய ஆய்வுகள் மற்றும் கணிப்புகள் இந்த ஆண்டு கடைசியில் எல் நினோ வலுப்பட வாய்ப்பு உள்ளது. இந்திய பெருங்கடல் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பாகவே உள்ளன. இந்திய வானிலை ஆய்வு மையம் தொடர்ந்து நிலவரங்களை கண்காணித்து வருவதாக தெரிவித்திருந்தது.

**வறட்சிப் பாதிப்பு**

இந்நிலையில் எல்–நினோ தாக்கத்தால் தமிழகத்தின் 12 மாவட்டங்களில் வறட்சிப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறுகிய காலப் பயிர்களைப் பரிந்துரைக்க மத்திய அரசு அறிவுறுத்தி இருக்கிறது.

**தென்மேற்கு பருவமழை**

இதன்படி அரியலூர், தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், ராமநாதபுரம், திருச்சி, திருப்பத்தூர், வேலூர், விருதுநகர் மாவட்டங்கள் பாதிக்கப்படலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. பாதிப்பு மாவட்டங்களில் எள், பயறு வகைகள் போன்ற குறுகிய காலப் பயிர்களை சாகுபடி செய்ய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட குறைவாக இருக்கக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.






தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், எரிசக்தித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்) மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 24.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 10-ம் தேதி

# இன்று கிடைத்திருக்கிறேன்"நாளை வறட்சி வரும்" என்பதல்ல!




இந்த ஆண்டு சந்தைக்குச் சென்றவர்கள் பலருக்கும் ஒரு சந்தேகம் வந்திருக்கும். "இது பழக்கடைதானா, நாவல் பழக் கிடங்கா?" என்று! கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நாவல் பழங்கள் குவியல் குவியலாக விற்பனைக்கு வந்துள்ளன. மரங்களும் "இந்த ஆண்டாவது எல்லோரும் நாவல் பழம் சாப்பிடட்டும்" என்ற முடிவுக்கு வந்தது போல, கிளை கிளையாக பழங்களால் நிரம்பியுள்ளன.

இதையடுத்து சமூக வலைதளங்களில் ஒரு தகவல் வேகமாகப் பரவியது. நாவல் பழங்கள் அதிகமாகக் காய்த்தால் அந்த ஆண்டு அல்லது அடுத்த காலகட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்படும் என்பதே அந்த வாதம். சிலர் இதை இயற்கையின் "எச்சரிக்கை மணி" என்றும் கூறினர்

ஆனால் தாவரவியல் அறிவியல் இதை எப்படி பார்க்கிறது?

தாவரங்களில் "ஸ்ட்ரெஸ் ஃப்ரூட்டிங்" (Stress Fruiting) என்ற ஒரு நிகழ்வு உள்ளது. அதாவது, கடுமையான வெப்பம், நீர் பற்றாக்குறை அல்லது சுற்றுச்சூழல் அழுத்தம் போன்ற சூழல்களில் சில மரங்கள் அதிக அளவில் பூத்து காய்க்கலாம். இது ஒரு வகையில், "நாளை என்ன ஆகுமோ தெரியாது; முதலில் விதைகளை உருவாக்கிவிடலாம்" என்ற இயற்கையின் இனப்பெருக்க உத்தி.

அதேபோல் "மாஸ்டிங்" (Masting) என்ற நிகழ்வும் உள்ளது. இதில் சில மரங்கள் இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திடீரென மிக அதிக அளவில் பூக்களையும் பழங்களையும் உற்பத்தி செய்கின்றன. இது மரங்களின் இயற்கையான வாழ்க்கைச் சுழற்சியின் ஒரு பகுதியாகும். எனவே அதிக விளைச்சல் என்பது கட்டாயமாக வரவிருக்கும் வறட்சிக்கான அறிவிப்பு அல்ல.

இந்த ஆண்டு நாவல் பழங்கள் அதிகமாகக் காய்த்ததற்கான காரணங்களில், கடந்த பருவமழையால் கிடைத்த மண் ஈரப்பதம், நிலத்தடி நீர் இருப்பு மற்றும் பூக்கும் காலத்தில் நிலவிய வறண்ட, வெப்பமான வானிலை ஆகியவை முக்கிய பங்காற்றியிருக்கலாம். நாவல் மரங்களுக்கு பூக்கும் நேரத்தில் அதிக மழை பெய்யாமல், வறண்ட வானிலை நிலவினால் பூக்கள் உதிராமல் காய்களாக மாறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்

"மரம் எதிர்கால வறட்சியை முன்கூட்டியே உணர்ந்து பழம் காய்க்கிறது" என்ற கருத்துக்கும் அறிவியல் ஆதாரம் குறைவு. தாவரங்கள் தற்போதைய சூழல் மாற்றங்களை உணர முடியும். ஆனால் மூன்று மாதங்கள் அல்லது ஒரு பருவம் கழித்து என்ன நடக்கும் என்பதை கணித்து அதற்கேற்ப பழம் காய்க்கும் திறன் அவற்றுக்கு இருப்பதாக உறுதியான ஆதாரங்கள் இல்லை.

ஒரு சுவாரசியமான கேள்வியும் இங்கே எழுகிறது. அதிக நாவல் பழம் காய்த்தால் வறட்சி வரும் என்றால், குறைவாகக் காய்த்த ஆண்டுகளில் அதிக மழை பெய்ய வேண்டும் அல்லவா? நடைமுறையில் அப்படி ஒரு நேரடி தொடர்பு தொடர்ந்து நிரூபிக்கப்படவில்லை.

உண்மையில் வறட்சிக்கான அறிகுறிகளை அறிய வேண்டுமெனில், நிலத்தடி நீர்மட்டம் குறைதல், குளங்கள் வற்றுதல், நீண்டகால மழைப் பற்றாக்குறை, வெப்பநிலை அதிகரிப்பு போன்ற காரணிகளே முக்கியமானவை. ஒரு மரத்தின் ஒரு பருவ விளைச்சலை மட்டும் வைத்து வானிலையைத் தீர்மானிப்பது சற்று அவசரமான முடிவாகிவிடும்.எனவே, இந்த ஆண்டு நாவல் பழங்கள் அபரிமிதமாகக் கிடைப்பது இயற்கையின் ஒரு சுவாரசியமான நிகழ்வு. அதை வறட்சிக்கான உறுதியான எச்சரிக்கையாகக் கருத வேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நினைவூட்டலாக எடுத்துக்கொண்டால் அதில் தவறும் இல்லை. ஆக, நாவல் பழம் நமக்குச் சொல்வது "நாளை வறட்சி வரும்" என்பதல்ல; "இன்று கிடைத்திருக்கிறேன், முதலில் என்னை சாப்பிட்டு மகிழுங்கள்!" என்பதுதான் என்று சொல்லலாம்!



இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட நகரம் ஊராட்சியில் அமைந்துள்ள கோமுட்டியேந்தல் கண்மாயின் சீரமைப்பு மற்றும் கரை பலப்படுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் கிராம மக்கள் மற்றும் கண்மாய் சங்க நிர்வாகிகளின் முன்னிலையில், துவக்கி வைத்தார்.

# திருச்செந்தூர் கோவில் தரிசன டிக்கெட் உயர்த்த முடிவு?

சென்னை, ஜூன். 24–

திருச்செந்தூர் தரிசன டிக்கெட் உயர்த்தப்படும் என வெளியான தகவல் குறித்து அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.



அப்போது அவர் கூறியதாவது:– தேவை அறிந்து மின்சாரத்துறைக்கு உடனடியாக 15,000 பேரை நியமிப்பதற்கான ஒப்புதலில் முதலமைச்சர் கையொப்பமிட்டுள்ளார்.

மின்சாரத்துறையில் 50 சதவீத காலிப்பணியிடம் உள்ள நிலையில் இந்த வருடத்தில் மட்டும் 15000 பேரை நியமிக்க உள்ளோம்.

ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக பணி நியமன ஆணை வழங்க உள்ளதாக முதலமைச்சர் அறிவித்துள்ளனர். திருச்செந்தூர் தரிசன டிக்கெட் விவகாரத்தில் மக்களிடம் கருத்து மட்டும் தான் கேட்கப்பட்டது, விலை உயர்த்தப்படவில்லை.

அதிகாரிகள் ஏற்கெனவே பரிசீலித்த நிலையில் கருத்து தான் கேட்டோம், விலை உயர்த்தவில்லை.

மக்கள் கூறுவதன்படி தான் அரசு செயல்படும், மக்கள் முடிவை தாண்டி தவெக அரசு எந்த முடிவும் எடுக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மும்பையில் பருவமழை தீவிரம்; ரெட் அலர்ட்..!

மும்பை, ஜூன். 24–




13 நாட்களுக்கு பின்னர் நேற்று இரவில் மும்பையில் தென்மேற்கு பருவமழை வெளுத்து வாங்கியது. கனமழையால் நகர் முழுவதும் பல்வேறு பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. கனமழையை முன்னி ட்டு, மும்பை மற்றும் அருகேயுள்ள பால்கர் மாவட்டத்திற்கு இன்று ரெட் அலர்ட் அறிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் இடி, மின்னலுடன் கூடிய தீவிர மழை பெய்யும். மணிக்கு 40 முதல் 60 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசும் என எச்சரிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று கனமழையை முன்னிட்டு, தானே மாவட்டத்திற்கு ஆரஞ்சு அலர்ட் விடப்பட்டு உள்ளது. ராய்காட், ரத்னகிரி மற்றும் சிந்துதுர்க் மாவட்டங்களுக்கு மஞ்சள் அலர்ட் விடப்பட்டு உள்ளது. பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மும்பையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நகரில் மழை பெய்து வருகிறது. இதில் நேற்று 3–வது நாளாக நகரில் மழை கொட்டி தீர்த்தது. காலை 7 மணியளவில் தொடங்கிய மழை இடைவிடாமல் மிதமாக பெய்தது. பல்வேறு இடங்களில் ஒரு மணி நேரத்துக்கு மேல் மழை இடைவிடாமல் தூறிக்கொண்டே இருந்தது. பிற்பகல் நேரத்தில் நகரில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. ஒரு சில இடங்களிலும் மிதமான அளவிலும், பெரும்பாலான இடங்களில் லேசான மழையும் பெய்தது. மும்பையில் 3–வது நாளாக மழை பெய்த போதிலும், ஏரிகளின் நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யவில்லை. மும்பைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் 8.07 சதவீதம் தண்ணீர் உள்ளது. மும்பையில் நேற்று மழை பெய்த போதிலும் சாலை, ரெயில் போக்குவரத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. பெஸ்ட் பஸ்கள் வழக்கம் போல இயக்கப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்து உள்ளது.

# ஹஜ் பயணம் செல்ல விரும்பும் இஸ்லாமியர்களுக்கு... விண்ணப்பங்கள் வரவேற்பு!

சென்னை, ஜூன். 24–



2027–ல் ஹஜ் பயணம் செல்ல விரும்பும் தமிழகத்தை சேர்ந்த இஸ்லாமியர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் வெளியிட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு;

"ஹஜ் 2007–ல் ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து மும்பையிலுள்ள இந்திய ஹஜ் குழுவானது தலல் விண்ணப்பங்களைப் பெற தொடங்கியுள்ளது என்பதை தமிழ் நாடு மாநில ஹஜ் குழு அறிவிக்க விருப்புகிறது. இந்திய ஹஜ் குழு மூலம் ஹஜ் 2027–ற்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 22.06.2026 முதல் 20.07.2026 (இரவு11.59 வரை) முடிய ஆன்லைன் விண்ணப்பத்தை இந்திய ஹஜ் குழு இணையதளம் மூலம் அதவது https//hajcommittee.gov.in என்ற இணையம் வழியாக (அல்லது) HAJ SUVIDHA" செயலியினை பதிவிறக்கம் செய்வதன் மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் தகுதியை உறுதிபடுத்திக்கொள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் உறுதிமொழிப் படிவத்தை கவனமாகப் படித்து பின்வருவனவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை (புகைப்படங்கள் அல்ல) பதிவேற்ற வேண்டும்:–

அ) விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளுக்கு முன்னரோ அல்லது அன்றோ வழங்கப்பட்டதும், குறைந்தது 31.12.2027 செல்லுபடியாகக்கூடியதுமான இயந்திரத்தால் படிக்கத்தக்க இந்தியக் கடவுச் சீட்டின் (Passport) முன் மற்றும் பின் பக்கங்கள் (1200 x 800 px. JPG/JPEG, 100–500 KB

ஆ) வெள்ளை நிறப் பின்னணிடின் கூய கடவுச்சீட்டு அளவு (480 x 640 px. JPG/JPEG 5–20 KB)

இ) வங்கிப் புத்தகத்தின் (passbook) நகல் அல்லது ரத்து செய்யப்பட்ட காசோலை (cancelled cheque) (590 x 750 px. JPG/JPEG, 80–250 KB மற்றும்

ஈ) முகவரிச் சான்று (590 x 750 px. JPG/JPEG, 80–250 KB)

கடந்த ஆண்டைப் போலவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஜ் பயணிகள் இரண்டு புறப்பாட்டு தளங்களை தங்கள் விருப்பத்தின் வரிசை அடிப்படையில் தேர்ந்தெடுக்கலாம்.

2. வாழ்நாளில் ஒருமுறை மட்டும் இந்திய ஹஜ் குழு மூலமாக பயணத்தை மேற்கொள்ளலாம் என்னும் விதிமுறையை இந்திய ஹஜ் குழு செயற்படுத்தி வருகிறது. ஹஜ் 2027–ற்கான வழிமுறைகளை இந்திய ஹஜ் குழுவின் இணையதள முகவரி https://hajcommittee.gov.in அல்லது (HAJ SUVITHA) செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பாஸ்போர்ட்டுக்காக புதிதாக விண்ணப்பிப்பவர்கள் குடும்ப பெயர்/கடைசி பெயர் ஆகியவற்றை காலியாக விடாமல் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்கிற நிபந்தனை உள்ளது. மேலும் ஹஜ் 2027–ல் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள தேர்ந்தெடுக்கப்படும் புனிதப் பயணிகள் நபர் ஒருவருக்கு முதல் தவணைத் தொகையாக ரூ.1,52,300/– செலுத்த தயார் நிலையில் இருப்பதுடன் தங்களிடம் செல்லத்தக்க பாஸ்போர்ட் உள்ளதை உறுதி செய்துகொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. ஆன்லைன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 20.07.2026 ஆகும். மேலும் ஹஜ் பயணிகள் மரணம் அல்லது கடுமையான மருத்துவ நோய் தவிர வேறு கரணத்திற்காக பயணத்தை இரத்து செய்ய நேரிட்டால் அபராதம் விதிக்கப்படும். இதனால் விண்ணப்பதார்களுக்கு நிதி இழப்பு ஏற்படக்கூடும். எனவே நான் பயணம் மேற்கொள்ள விருப்பமுள்ளவர்கள். தங்களை தயார்நிலை மற்றும் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான உறுதிப்பாட்டை கவனமாக பரிசீலித்த பின்னரே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 3 நாட்கள் விடுமுறை.. சென்னையில் இருந்து சிறப்பு ஏற்பாடு!

சென்னை, ஜூன். 24–



பயணிகளுக்காக பண்டிகை நாட்கள், தொடர் விடுமுறை நாட்களில் சிறப்பு பேருந்துகளை தமிழக போக்குவரத்து கழகம் இயக்கி வருகிறது. அந்த வகையில், 3 நாட்கள் தொடர் விடுமுறையை முன்னிட்டு, தமிழக அரசு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, சென்னையில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிவிப்பில், ஜூன் 25ஆம் தேதி (வியாழக்கிழமை), ஜூன் 26ஆம் தேதி மொஹரம் பண்டிகை (வெள்ளிகிழமை) ஜூன் 27ஆம் தேதி (சனிக்கிழமை), மற்றும் ஜூன் 28ஆம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) தொடர் விடுமுறையை முன்னிட்டு நாளை முதல் ஜூன் 27ஆம் தேதிகளில் நாட்களில் சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு ஜூன் 25ஆம் தேதி வியாழக்கிழமை அன்று 525 பேருந்துகள் இயக்கப்படும்.

கிளாம்பாக்கம், கோயம்பேட்டில் இருந்து சிறப்பு பேருந்துகள்

ஜூன் 26ஆம் தேதி வெள்ளிக்கிழமை மற்றும் ஜூன் 27ஆம் தேதி சனிக்கிழமை 315 பேருந்துகளு ம் சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 25ஆம் தேதி அன்று 85 பேருந்துகளும், ஜூன் 26ஆம் தேதி மற்றும் ஜூன் 27ஆம் தேதிகளில் 75 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து ஜூன் 25 முதல் ஜூன் 27ஆம் தேதிகளில் தலா 14 பேருந்துகளும் மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிரு ந்தும் ஜூன் 28ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று 615 சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.



# குழந்தை வரம் அருளும் மகத்தான பரிகாரம்!



பூர்வ ஜென்ம கர்மாக்கள் இருக்கும் பொழுது குழந்தை வரம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. சிலருக்கு மூன்று வருடம் பின் குழந்தை பிறக்கும். சிலருக்கு பத்து வருடமாகியும் குழந்தை பிறப்பதில் தொடர்ந்து தடை இருந்து கொண்டே இருக்கும். உடல் ரீதியான பிரச்சனைகள் இருக்கும் பொழுது அதற்கான தீர்வுகளை மருத்துவரை அணுகித் தீர்த்துக் கொள்ளலாம்.

ஆனால் எந்த விதமான பிரச்சினையும் இன்றி சிலருக்குக் குழந்தை வரம் என்பது கனவாகவே இருந்து வரும். இத்தகையவர்களுக்கு எளிமையான பரிகாரங்கள் உள்ளன. இவற்றைச் செய்தால் அடுத்த சில மாதங்களில் உங்கள் மடியிலும் மழலைத் தவழ ஆரம்பிக்கும். இதற்கு என்ன செய்யலாம்?

நமக்கு ஒரு குழந்தை இல்லையே என்று ஏங்குபவர்களை விட, இன்னும் விசேஷம் இல்லையா? என்று கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்வது மிகவும் வேதனை தரக்கூடிய ஒரு விஷயமாக இருக்கும். திருமணமாகி ஒரு வருடம் முடிந்து இருந்தால் போதும்! வரிசையாகச் செல்லும் இடங்களிலெல்லாம் இதே கேள்வியை கேட்டு நச்சரித்துக் கொண்டிருப்பார்கள். அப்படி ஒரு விசேஷம் இருந்தால்! நானே கூற மாட்டேனா? எதற்கு இவர்கள் கேட்டு நம்மைச் சங்கடப் படுத்துகிறார்கள் என்று மனதிற்குள் புழுங்கிக் கொண்டிருப்பார்கள்.


குழந்தை இல்லையே என்று வருடக்கணக்கில் கோவில் கோவிலாகச் செல்பவர்களும், அங்குச் சென்று தொட்டில் கட்டி வழிபடுபவர்களும் ஏராளமானோர் இருக்கின்றனர். கோவிலில் சென்று தொட்டில் கட்டும் மரத்தைப் பார்த்தால் வரிசையாக அளவில்லாமல் தொட்டில்கள் கட்டியிருப்பார்கள். இவ்வளவு பேருக்குக் குழந்தை வரம் கிடைப்பதில் பிரச்சனையா? என்று ஆச்சரியமாகப் பார்க்கத் தோன்றும்.

அம்பாள் ஆண்டாள் பிறந்த ஆடிப்பூரம் குழந்தை இல்லாதவர்களுக்கு மிகவும் விசேஷமான தினமாகப் பார்க்கப்படுகிறது. அன்றைய நாளில் அம்மனுக்கு முளைக் கட்டிய பச்சைப் பயிறு வயிற்றில் கட்டி விடுவார்கள். அது போல் வளைகாப்பு விசேஷங்கள் நடக்கும்.

அதில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு வளையல் பிரசாதமாக வழங்கப்படும். இந்த நாளில் வளையலை வாங்கிக் கொள்ளும் பெண்களுக்கு விரைவாகக் குழந்தை பிறக்கும் என்பது ஐதீகம். மிகவும் கோலாகலமாக அம்மனுக்கு நடைபெறும் வளையல் திருவிழா குழந்தை இல்லாதவர்கள் அதிகம் எதிர்பார்க்கும் ஒரு நாளாகவும் உள்ளது.

இந்த வகையில் தினமும் உங்கள் வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு ஒரு தம்ளர் தண்ணீர் கொடுத்து, மஞ்சள் கிழங்கும், ஜோடி வளையல்களும் கொடுத்து வழி அனுப்ப வேண்டும். இதை எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம். உங்கள் வீட்டிற்குச் சுமங்கலிப் பெண்கள் வருகிறார்கள் என்றாலே, இதனைச் செய்து விடுங்கள். வளையல் பச்சை, மஞ்சள், சிகப்பு போன்ற நிறங்களில் இருப்பது விசேஷமானது.

இதனை முன்கூட்டியே தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். அது போல் தினமும் ஒரு கப் முளைக்கட்டிய பச்சைப் பயறு சாப்பிட்டு வாருங்கள். இந்த இரண்டு விஷயங்களைத் தொடர்ந்து செய்து பாருங்கள் விரைவில் நிச்சயம் உங்களுக்கும் குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.



## சினிமா துளிகள்..!

## சினிமா ஹாட் நியூஸ்..!

### ஹாலிவுட்

பிரபல இயக்குநர் Quentin Tarantino புதிய திரைப்பட படப்பிடிப்பில் வேல்ஸில் காணப்பட்டுள்ளார். பாடகி Kylie Minogue உடனான காட்சிகள் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஜூன் இறுதி வார OTT வெளியீடுகளில் House of the Dragon, Avatar: Fire and Ash, Avatar: The Last Airbend–erஉள்ளிட்ட பல முக்கிய படைப்புகள் வெளியாகியுள்ளன.

### பாலிவுட்

நடிகை Shraddha Kapoor நடிக்கும் "Eetha" திரைப்பட டீசர் வெளியாகி வைரலாகியுள்ளது. இதில் அவர் கர்ப்பிணி லாவணி கலைஞராக மாறியிருப்பது ரசிகர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

நடிகர் Ranveer Singh இயக்குநர் Hansal Mehta அலுவலகத்தில் காணப்பட்டதால் "Pralay" திரைப்பட அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

நடிகை Tamannaah Bhatia, பெண்களை பொருளாக்கும் பார்வைக்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளார். "Item Song" என்ற சொல்லை பயன்படுத்த விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார்.

### கோலிவுட்


Hrithik Roshan, Rajinikanth நடிக்கும் "Jailer 2" திரைப்படத்தில் சிறப்பு தோற்றத்தில் வரலாம் என்ற தகவல் ரசிகர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

நடிகர் Vishal, தமிழக முதல்வர் Vijay உடனான நீண்டகால நட்பைப் பற்றி பேசியது சமூக வலைதளங்களில் கவனம் பெற்றுள்ளது.

நடிகர் Ajith Kumar குடும்பத்துடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் ரசிகர்களிடையே வைரலாகி வருகின்றன.




## சிக்கன், மட்டன் சாப்பிட்டதும் இதை சாப்பிடாதீர்கள்... ஆபத்து!



ஞாயிற்றுக்கிழமை என்றாலே அசைவ உணவுகள் தான் பிரபலம். பலருக்கு அசைவ உணவு இல்லாமல் அன்றைய பொழுது முழுமையடையாது; சொல்லப்போனால், சிலர் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு வேளைகளாவது அசைவம் சாப்பிடாமல் இருக்க முடியாது. அசைவ உணவுகளில் உடலுக்குத் தேவையான புரதம், வைட்டமின்கள், கொழுப்பு மற்றும் பிற சத்துக்கள் நிறைந்துள்ளன. இவற்றை அளவாக உட்கொள்வது ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

இருப்பினும், அசைவ உணவை உட்கொள்வதில் காட்டும் அதே கவனத்தை, சாப்பிட்ட பிறகும் சில விஷயங்களில் நாம் செலுத்த வேண்டும். கோழி அல்லது ஆட்டிறைச்சி சாப்பிட்ட உடனேயே சில குறிப்பிட்ட உணவுகளை உட்கொள்வது செரிமான மண்டலத்தை முற்றிலும் பாதிக்கக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இவை கடுமையான அஜீரணம், அமிலத்தன்மை (acidity), வாயுத் தொல்லை, வயிறு உப்புசம் மற்றும் வயிற்று வலி போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்தலாம். அசைவ உணவு சாப்பிட்ட உடனேயே தவிர்க்க வேண்டிய உணவுகள் எவை என்று இப்போது பார்ப்போம்.

**குளிர்ந்த நீர் ஐஸ்கிரீம்**

அசைவ உணவை வயிறாரச் சாப்பிட்ட பிறகு பலர் குளிர்ந்த நீர் குடிப்பது அல்லது ஐஸ்கிரீம் சாப்பிடுவது வழக்கம். ஆனால் இது மிகவும் ஆபத்தானது. இறைச்சியில் உள்ள கொழுப்பை உருக்குவதற்கு உடலுக்கு வெப்பம் தேவைப்படுகிறது. சாப்பிட்ட உடனேயே குளிர்ந்த உணவுகளை உட்கொள்வது செரிமான செயல்முறையை தற்காலிகமாக மந்தமாக்குகிறது. இதனால் கொழுப்பு இறுகி, அஜீரணத்தை ஏற்படுத்துகிறது.

**பால் பால் சார்ந்த பொருட்கள்**

மீன், கோழி அல்லது ஆட்டிறைச்சி சாப்பிட்ட உடனேயே பால், மோர், தயிர் அல்லது பிற பால் சார்ந்த பொருட்களை ஒருபோதும் உட்கொள்ளக்கூடாது. ஏனெனில், இறைச்சியில் உள்ள புரதங்களைச் செரிமானம் செய்யும் முறையும், பாலைச் செரிமானம் செய்யும் முறையும் வெவ்வேறானவை. இவை இரண்டும் ஒரே நேரத்தில் வயிற்றுக்குள் சென்றால், கடுமையான வாயுத் தொல்லை, வயிற்று வலி அல்லது உணவு நச்சுத்தன்மை (food poisoning) ஏற்பட வாய்ப்புள்ளது.

**சிட்ரஸ் பழங்கள்**

அசைவ உணவு சாப்பிட்ட உடனேயே எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற சிட்ரஸ் பழங்களைச் சாப்பிடுவது நல்லதல்ல. இந்தப் பழங்கள் மிக விரைவாகச் செரிமானம் ஆகக்கூடியவை; ஆனால் இறைச்சி செரிமானம் ஆக நீண்ட நேரம் எடுக்கும். இந்தச் செரிமான நேர இடைவெளியில் ஏற்படும் முரண்பாடு, வயிற்றில் அமிலத்தன்மையை அதிகரித்து, வாயுத் தொல்லை மற்றும் வயிற்று வலி போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

**தேநீர் காபி**

அதிகமான உணவு உண்ட பிறகு ஒரு கோப்பை தேநீர் அல்லது காபி குடிக்கும் பழக்கம் பலரிடம் உள்ளது. ஆனால் அசைவ உணவு சாப்பிட்ட உடனேயே இவற்றைத் தவிர்க்க வேண்டும். தேநீர் மற்றும் காபியில் உள்ள 'டானின்கள்' (tannins), நாம் உண்ணும் இறைச்சி அல்லது கடல் உணவுகளில் உள்ள இரும்புச்சத்தை உடல் உறிஞ்சுவதைத் தடுக்கின்றன. இதனால், நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துக்கள் உடலுக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை.

**இனிப்புகள் டெசர்ட்ஸ் (Desserts)**

உணவுக்குப் பிறகு இனிப்புகளைச் சாப்பிடுவது மகிழ்ச்சியானதாக இருந்தாலும், அசைவ உணவு சாப்பிட்ட உடனேயே இனிப்பு வகைகளை (desserts) உட்கொள்வதைத் தவிர்க்கவும். இறைச்சியில் உள்ள புரதம் மற்றும் கொழுப்பைச் செரிமானம் செய்வதற்கே உங்கள் செரிமான மண்டலம் சிரமப்படுகிறது. இதனுடன் சர்க்கரை நிறைந்த இனிப்புகளைச் சேர்த்து உட்கொள்வது செரிமானத்தை மேலும் தாமதப்படுத்தி, வயிற்று உப்புசம் மற்றும் அதிகப்படியான அமிலத்தன்மைக்கு (acidity) வழிவகுக்கும்.


**அதிக கார்போஹைட்ரேட் கொண்ட உணவுகள்**

கொழுப்புச் சத்து மிகுந்த இறைச்சியுடன் உருளைக்கிழங்கு அல்லது மாவுச்சத்து அதிகம் உள்ள காய்கறிகளை அதிக அளவில் சேர்த்து உண்ணக்கூடாது. இத்தகைய உணவுக் கலவை செரிமானமாவதற்கு நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும். இதனால் உணவு உண்ட பிறகு உடல் ஒருவித மந்தமான நிலைக்குச் சென்று, கடும் சோர்வு மற்றும் வயிற்று வலியை ஏற்படுத்தக்கூடும்.



இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம் சாத்தக்கோன்வலசை அரியமான் செல்லும் சாலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் மரக்கன்றுகளை நடவு செய்யும் பணியினை தொடங்கி வைத்தார்.

# உலகிலேயே முதன்முறை..! மனித வழக்கறிஞர்களுக்கு எதிரான நீதிமன்ற வழக்கில் AI சட்ட நிறுவனம் வெற்றி..!



புதுடெல்லி, ஜூன். 24–

உலகிலேயே முதன்முறையாக, இங்கிலாந்தில் உள்ள ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் சட்ட நிறுவனம், மனித வழக்கறிஞர்களுடன் நேருக்கு நேர் மோதி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுள்ளது. சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் திறன் கொண்ட ஒரு உரையாடல் மென்பொருளான Garfield AI, ஒரு சுயாதீன மனிதவள (HR) நிர்வாகியான டாமிரெஸ் கமால் தக்விடிருக்காக வாதாடி, £7,000 (ரூ. 8.79 லட்சம்) மதிப்புள்ள ஒரு சிறு உரிமையியல் நீதிமன்ற வழக்கில் வெற்றி பெற்றது.

வெறும் £400 (ரூ. 50,252) செலுத்தியதன் மூலம், டாமிரெஸ் கமால் தக்விடிர் Garfield–ன் சேவைகளைப் பெற்று, செலுத்தப்படாத கட்டணங்களுக்காக ஒரு விருந்தோம்பல் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வழக்கறிஞர்கள் ஒழுங்குமுறை ஆணையத்தால் (SRA) அங்கீகரிக்கப்பட்ட Garfield AI, இந்த வழக்கைத் தயாரித்து, பின்னர் நீதிமன்றத்தில் வாடிக்கையாளருக்காக வாதிட ஒரு மனித வழக்கறிஞரை நியமித்தது. இந்த AI, விசாரணைக்கு முந்தைய அனைத்து சட்டப் பணிகளையும் மேற்கொண்டது. இதில் நான்கு சாட்சி அறிக்கைகள் மற்றும் ஒரு தொகுதி ஆவணங்கள் அடங்கும்.

பின்னர், விசாரணை தொடங்குவதற்கு சற்று முன்பு, ஒன் எசெக்ஸ் நீதிமன்றத்தின் இளநிலை வழக்கறிஞரான டொமினிக் லீக்கு Garfield AI அறிவுறுத்தியது. மே மாதம் வான்ட்ஸ்வொர்த் கவுண்டி நீதிமன்றத்தில் நடைபெற்ற 3 மணி நேர விசாரணைக்குப் பிறகு, இரு தரப்பினரும் வழக்கறிஞர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நிலையில், டாமிரெஸ் கமால் தக்விடிருக்கு நீதிமன்றம் ஆதரவாகத் தீர்ப்பு வழங்கியது.. மேலும், 7,000 பிரிட்டிஷ் பவுட்ன் இழப்பீடு வழங்கியதுடன், எதிர் வழக்கையும் தள்ளுபடி செய்தது.

"இந்த விசாரணையின் நோக்கங்களுக்காக Garfield AI தயாரித்த ஆவணங்கள் போதுமானதை விட அதிகமாக இருப்பதாக நான் கண்டேன்," என்று லி கூறினார்.

Garfield AI–ன் இணை நிறுவனர் பிலிப் யங், இதை ஒரு "வரலாற்றுத் தருணம்" என்று பெருமிதம் தெரிவித்தார்.. மேலும் இது "நீதி கிடைப்பதற்கான அணுகல்" என்ற ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைக்கக்கூடும் என்றும் கூறினார்.

"சட்டத்துறையிலும் நீதி கிடைப்பதற்கான அணுகலிலும் ஒரு மாபெரும் வரலாற்றுத் தருணத்தை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். Garfield AI, தனது முதல் வழக்கில் வெற்றி பெற்றுள்ளது, அதுவும் வழக்கறிஞர்களை நியமித்த மனித வழக்கறிஞர்கள் நிறுவனத்திற்கு எதிராக," என்று யங் தெரிவித்தார்..

"இது ஒரு சாதாரண 'சிறிய அளவிலான வழக்கு' (small claim) விசாரணை மட்டுமல்ல. அதாவது, ஒரு மணி நேர விசாரணைக்குப் பிறகு உடனடியாகத் தீர்ப்பு வழங்கப்படுவதற்குப் பதிலாக, இது பல சாட்சிகள் மற்றும் விரிவான குறுக்கு விசாரணைகளை உள்ளடக்கிய மூன்று மணி நேர விசாரணையாக அமைந்தது; இறுதியில் தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்பட்டது.

Garfield AI சேவையைப் பயன்படுத்தியவர் தனது வழக்க வென்றது மட்டுமல்லாமல், எதிர் தரப்பினர் முன்வைத்த எதிர்வாதத்தையும் (counterclaim) முறியடித்தார். மனிதர்களுக்கு எதிராக ஒரு AI வழக்கறிஞர் வெற்றி பெற்ற உலகின் முதல் வழக்கு இதுவேயாகும்.

இது நீதி கிடைப்பதில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்," என்று அவர் மேலும் கூறினார். இந்தச் சட்டரீதியான 'சாட்பாட்' (chatbot) 10,000 பவுண்டுகள் (ரூ. 12.5 லட்சம்) வரையிலான இழப்பீட்டு கோரிக்கைகளைக் கையாளுகிறது. வழக்கமான சட்ட நிறுவனத்தில் ஒரு வழக்கறிஞரை அமர்த்துவதற்கு ஆகும் செலவில் மிகச் சிறிய ஒரு பகுதியையே இதற்கான கட்டணமாக இது வசூலிக்கிறது..

# பத்திரப்பதிவில் அதிரடி மாற்றம்..!

சென்னை, ஜூன். 24–

பத்திரப் பதிவின் போது முந்தைய அசல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என பதிவுச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.


பத்திரப் பதிவு: பழைய அசல் ஆவணங்கள் கட்டாயம் இல்லை! - மதுரை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

பதிவின் போது முந்தைய அசல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டாயத்தை அமல்படுத்திய பதிவுச் சட்டத்தின் 34-சி பிரிவு ரத்து



BREAKING NEWS பதிவுச் சட்டம் 34-சி பிரிவு ரத்து

மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு
- பத்திரப் பதிவு செய்யும் போது முந்தைய அசல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை சட்டவிரோதமானது.
- மக்களின் சுமையை அதிகரிக்கும் இந்த கட்டாயம் நியாயமற்றது எனக் கருத்து.

"பதிவுச் சட்டம் 34-சி பிரிவு மக்களுக்கு தேவையற்ற சிரமத்தையும், காலதாமதத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே, அந்த பிரிவை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது." – மதுரை உயர்நீதிமன்றம்

இந்த தீர்ப்பின் முக்கியத்துவம்
- பொதுமக்களுக்கு நிவாரணம்
- சொத்து பதிவு செயல்முறை எளிதாகும்
- தேவையற்ற ஆவணச் சுமை நீக்கம்
- வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவு சேவை

தமிழகத்தில் போலி ஆவணப் பதிவுகளைத் தடுக்கும் நோக்கில், 1908–ம் ஆண்டின் பதிவுச் சட்டத்தில் பிரிவு 34–சி சேர்க்கப்பட்டது. இதன்படி, சொத்து விற்பனையாளர்கள் முந்தைய அசல் ஆவணங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது. மேலும், 10 நாட்களுக்குள் பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ், அசல் ஆவணம் தொலைந்திருந்தால் காவல்துறை சான்றிதழ், நாளிதழ் விளம்பரம், பட்டா மற்றும் அடமானம் இருந்தால் 'தடையில்லாச் சான்று' ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இந்த புதிய பிரிவுக்கு குடியரசுத் தலைவர் ஜனவரி 23, 2026 அன்று ஒப்புதல் அளித்திருந்தார். இருப்பினும், சார் பதிவாளர்களுக்குத் தெளிவான வழிகாட்டுதல் இல்லாததால், அசல் ஆவணங்கள் இன்றி சொத்துகளைப் பதிவு செய்ய சார் பதிவாளர்கள் மறுப்பதாகவும், இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாகவும் கூறி, கொடைக்கானலைச் சேர்ந்த மனோஜ் குமார் துகார் உள்ளிட்டோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவில், பதிவுச் சட்டத்திருத்தத்தின் பிரிவு 34 (சி), ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட விதி 55–ஏ–ஐ மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சியாகும். சட்டமன்றம் நீதிசார்ந்த அதிகாரங்களை நிர்வாகத்துறையிடம் வழங்க முடியாது; இது அதிகாரப் பகிர்வு கோட்பாட்டையும், அரசியலமைப்புச் சட்டத்தின் 14–வது பிரிவையும் மீறுவதாகும். அரசியலமைப்பின் 300–ஏ பிரிவின் கீழ், ஒருவரின் சொத்துரிமைக்குத் தன்னிச்சையான மற்றும் நியாயமற்ற கட்டுப்பாடுகளை இந்தச் சட்டத்திருத்தம் விதிக்கிறது. எனவே, அதிகாரம் வரம்பை மீறியதாகக் கருதப்படும் பதிவுச் சட்டத்தின் 34–சி பிரிவை ரத்து செய்கிறோம்.

வில்லங்கச் சான்றிதழ் கோரும் போது, சொத்தின் தற்போதைய மற்றும் முந்தைய வில்லங்கங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட வேண்டும். வில்லங்கச் சான்றிதழில் நில அளவை எண் மற்றும் கதவு எண் ஆகியவற்றைக் குறிப்பிடுமாறு பதிவுத் துறைத் தலைவருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். இந்த நடைமுறையைத் தமிழ்நாடு முழுவதும் உள்ள சார்–பதிவாளர் அலுவலகங்களில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் படிப்படியாக அமல்படுத்த வேண்டும். இந்த உத்தரவின் மூலம், போலிப் பதிவு தொடர்பான அரசின் அச்சம் நீங்குவதுடன், பொதுமக்கள் சொத்துப் பதிவுக்கு முன்பாக முழுமையான ஆய்வை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# பொறியியல் தரவரிசை பட்டியல் ஜூலை 1



சென்னை, ஜூன். 24–

பொறியியல் படிப்புக்கான தரவரிசை பட்டியல் ஜூலை 1–ம் தேதி வெளியிடப்படும் என உயர்கல்வித்துறை அமைச்சர் பி.விஸ்வநாதன் அறிவித்துள்ளார். முன்னதாக, தரவரிசை பட்டியல் ஜூன் 29–ம் தேதி அன்று வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

சிபிஎஸ்இ 12–ம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் மறுமதிப்பீட்டு முடிவுகள் ஜூன் 21 முதல் படிப்படியாக வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஜூன் 29–ம் தேதி அன்று வெளியிட இருந்த பொறியியல் தரவரிசை பட்டியல் ஜூலை 1–ம் தேதி அன்று வெளியிடப்படும்.

அன்றைய தினம், பொறியியல் சேர்க்கைக்கான கலந்தாய்வு தேதிகளும் அறிவிக்கப்படும். தரவரிசை பட்டியலில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அவற்றை சரிசெயவ்தற்கு ஜூலை 1 முதல் 5 வரை காலஅவகாசம் அளிக்கப்படும். இந்த கால கட்டத்தில் மாணவர்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள தங்கள் இருப்பிடத்துக்கு அருகேயுள்ள தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை சேவை மையத்தை (TFC) நேரில் அணுகலாம்.

## மத்திய அரசின் CSIRNPL நிறுவனத்தில் புதிய 20 பணியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: CSIR தேசிய இயற்பியல் ஆய்வகம் (National Physical Laboratory)

அறிவிப்பு எண்: Rectt./02/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: நிரந்தரப் பணி

மொத்தக் காலிப் பணியிடங்கள்: 20 தொழில்நுட்ப வல்லுநர் (Technician – 1) பணியிடங்கள்

பணியிடம்: புது தில்லி

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 28.05.2026

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 30.06.2026

விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.nplindia.in/


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




# வேலை வாய்ப்பு

## திருப்பூர் சுகாதாரத் துறையில் 97 புதிய பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: திருப்பூர் மாவட்ட சுகாதாரச் சங்கம்

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப்பணியிடங்கள்: 97 (மருத்துவமனைப் பணியாளர், செவிலியர் / MLHP, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (சுகாதார ஆய்வாளர் நிலை II), கணக்கு உதவியாளர், ஆய்வகத் தொழில்நுட்புநர் (நிலை III), ஆலோசகர், பல் மருத்துவர், இயன்முறை சிகிச்சையாளர், செவித்திறன் நிபுணர் (Audiologist & Speech Therapist), ஆடியோமெட்ரி நிபுணர்/உதவியாளர், செவித்திறன் மற்றும் பேச்சு மொழி நிபுணர், ஆரம்பக்கட்ட தலையீட்டு நிபுணர் சிறப்பு கல்வியாளர் சமூகப் பணியாளர், தொழில்சார் சிகிச்சையாளர், அறுவை சிகிச்சை அறை (OT) தொழில்நுட்புநர் / உதவியாளர்)

பணிபுரியும் இடம்: திருப்பூர்


விண்ணப்பம் தொடங்கும் தேதி: 06.06.2026

விண்ணப்பிக்கக் கடைசி தேதி: 29.06.2026 அன்று மாலை 05.00 மணி வரை

விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tiruppur.nic.in/

## சேலம் ஊரக வாழ்வாதார இயக்கத்தில் 197 புதிய பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப்பணியிடங்கள்: 197 (சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள்)

பணியிடம்: சேலம்

விண்ணப்பம் தொடங்கும் தேதி: 22.05.2026

விண்ணப்பிக்கக் கடைசி தேதி: 29.06.2026

விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://salem.nic.in/

## தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NIOT) 19 புதிய பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT)

அறிவிப்பு எண்: NIOT/E&P/02/2026 (PROJECT)

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 19 (Project Engineer–I, Project Engineering Associate, Technical Associate–II, Technical Associate–I, Project Engineering Assistant, Project Administration Assistant ஆகிய பதவிகள்)

பணிபுரியும் இடம்: சென்னை

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 05.06.2026

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 25.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டுமே

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.niot.res.in/

## DRDO INMAS–ல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி: 15 பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: DRDO INMAS அணு மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் நிறுவனம் (Institute of Nuclear Medicine and Allied Sciences)

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 15 (ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் இளைய ஆராய்ச்சி ஆய்வாளர் பணியிடங்கள்)

பணியிடம்: டெல்லி

தொடக்கத் தேதி: 01.03.2026

கடைசித் தேதி: 30.06.2026

விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://drdo.gov.in/

## அணு மருத்துவம் /இணை அறிவியல் நிறுவனத்தில் (INMAS) 15பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: DRDO INMAS அணு மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் நிறுவனம் (Institute of Nuclear Medicine and Allied Sciences)

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 15 (ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் இளைய ஆராய்ச்சி ஆய்வாளர் பணியிடங்கள்)

பணியிடம்: டெல்லி

தொடக்கத் தேதி: 01.03.2026

கடைசித் தேதி: 30.06.2026

விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://drdo.gov.in/

## ஹார்முஸ் நீரிணையை பாதுகாப்பாக கடந்த 11 இந்திய கப்பல்கள்!



புதுடெல்லி, ஜூன். 24–
அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே தற்காலிக அமைதி ஒப்பந்தம் கையெ முத்தானது. மேலும் நிரந்தர அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ள இருதரப்பும் 60 நாட்களுக்கு காலக்கெடு நிர்ணயித்து ஆராய்ந்து வருகிறது. இந்தநிலை யில் தற்காலிக ஒப்பந்தம் கையெழுத்துக்கு பிறகு ஹார்முஸ் நீரிணையை 11 வணிகக் கப்பல்கள் வெற்றிக்கரமாக கடந்து இந்தியா நோக்கி விரைந்துள்ளது.

இதனை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஊடக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், டெல்லியில் நடைபெற்ற செய்தியா ளர் சந்திப்பில் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தினார்.

2 லட்சத்து 85 ஆயிரம் டன் கச்சா எண்ணெய்யுடன் 3 இந்திய கொடி ஏந்திய கச்சா எண்ணெய் கப்பல்கள், எண்ணெய், கியாஸ் மற்றும் உரம் பாரத்துடன் கூடிய பிற நாடுகளை சேர்ந்த கப்பல்களும் இந்தியா நோக்கி வருவதாக தெரிவித்தார். பாரசீக வளைகுடாவில் இந்தியாவுக்கு வரவுள்ள மேலும் 12 கப்பல்கள் தற்போது அங்கு பாதுகாப்பாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அதிபர் டிரம்பை கொல்ல சதி திட்டம்...!



வாஷிங்டன், ஜூன். 24–
அமெரிக்க அதிபர் டிரம்ப் பங்கேற்பதாக இருந்த வெள்ளை மாளிகை மல்யுத்த நிகழ்ச்சி, கடந்த 14–ந் தேதி பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலகமே உற்றுநோக்கிய இந்த நிகழ்ச்சிக்கு நடுவே, ஒரு பயங்கரவாத சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தது ஒட்டு மொத்த அமெரிக்காவையும் உலுக்கியுள்ளது.

ஜனாதிபதி டிரம்ப்பை குறிவைத்து, வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட டிரோன் விமானங்களை மோதவிட்டு கூட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்த ஒரு கும்பல் ரகசியமாகத் திட்டமிட்டிருந்தது. இந்த அதிர்ச்சித் தகவல் தேசிய புலனாய்வு அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தெரியவந்ததால், 5 பேர் கொண்ட கும்பலை அவர்கள் சுற்றி வளைத்துப் பிடித்தனர். இந்நிலையில், இந்த சதித்திட்டத்தின் பின்னணியில் தொடர்புடைய மேலும் 2 முக்கிய நபர்களைப் போலீசார் தற்போது அதிரடியாகக் கைது செய்துள்ளனர். இதன் மூலம் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திமுக ஜென்-சி கூட்டம்: தவெக அரசுக்கு உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!



சென்னை, ஜூன். 24–
தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:–

திமுகவின் ஜென்–சி (GenZ) இளைஞர்களை ஒருங்கிணைத்துக் கூட்டங்கள் நடத்தி வந்த தம்பி அன்பானந்தன் அரியப்பனை, கிருஷ்ணகிரி ராயக்கோட்டையில் அவரது வீட்டுக்குள் நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து காவல்துறையினர் கைது செய்ய முயற்சி செய்ததை வன்மையாக கண்டிக்கிறேன்.

இதே போல சமீபத்தில், ஜென்–சி கூட்டத்தில் பேசிய கனி எனும் தம்பி மீது தவெக ரவுடிகள் சைதாப்பேட்டையில் கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர். தம்பி கனியை தாக்கிய குற்றவாளிகள் மீது இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யாத காவல்துறை, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த தம்பி கனியை மிரட்டி டிஸ்சார்ஜ் செய்ய வைத்தது, திமுக இளைஞர்கள் ஆளுங்கட்சியையும் – அரசையும் எதிர்த்து பேசினால் காவல்துறையை அனுப்புவது, அதுவே, தாக்கியவர்கள் த.வெ.க.வினர் என்றால் வேடிக்கைப் பார்ப்பது... இது தான் மாற்றமா?.

நிர்வாகத் திறனற்ற சோபா மாடல் அரசின் போலி பிம்பம், இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் இந்த ஆட்சி யாளர்கள் அடக்குமுறையை கையில் எடுத்து இருக்கிறார்கள். திமுக இளைஞர்களை காவல்துறையை ஏவி அச்சுறுத்தலாம் என்று ஆளும் அரசு நினைத்தால், திமுக அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது என்று எச்சரிக்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## காரைக்குடியில் காங்., தோல்விக்கு சிதம்பரமே காரணம்: கட்சியினர் புகார்!



காரகைக்குடி, ஜூன். 24–
'காரைக்குடி தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் மாங்குடி தோல்விக்கு, முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம், அவரது மகன் கார்த்தி ஆகியோரே காரணம்' என, உண்மை கண்டறியும் ஐவர் குழுவிடம், சிவகங்கை மாவட்ட காங்கிரசார் புகார் தெரிவித்துள்ள தகவல் வெளியாகி உள்ளது. சிவகங்கை மாவட்ட காங்கிரசார் கூறியுள்ளதாவது:

சட்டசபை தேர்தலில், தி.மு.க., கூட்டணியில் காங்கிரஸ் நீடிக்க, சிதம்பரம் முக்கிய காரணமாக செயல்பட்டதை, தொண்டர்கள் விரும்பவில்லை. காரைக்குடியில், தினமும் 7 கி.மீ., துாரம் தெரு தெருவாக நடந்து சென்று, சிதம்பரம் ஓட்டு கேட்டார். ஆனால், கட்சியினர் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஓட்டு அளித்தனர். காரைக்குடியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காததால், சிதம்பரம் ஆதரவாளர் சுந்தர்ராஜன், கட்சியிலிருந்து ஒதுங்கி விட்டார். பிரசாரம் செய்த போது, கட்சி நிர்வாகிகளிடம், 'நான் சொல்வதை தான் கேட்க வேண்டும்' என, பெரியண்ணன் போக்கில் செயல்பட்டதால், அவர்களும் நொந்து போய் விட்டனர்.

'ஆதிக்க சக்தி ஆட்டி படைக்கிறது' என, பெரும்பான்மை சமுதாயத்தை விமர்சித்ததால், அந்த சமுதாயத்தினரின் ஓட்டுகளும் காங்., வேட்பாளர் மாங்குடிக்கு கிடைக்கவில்லை. சிவகங்கையில் தொடர்ந்து எம்.பி.,யாக சிதம்பரமும், கார்த்தியும் இருந்து வரும் நிலையில், புதுமுகங்க ளுக்கு வாய்ப்பு கிடைக்காததால், நிர்வாகிகள் பலர் ஒதுங்கி விட்டனர். காரைக்குடி தொகுதியில் த.வெ.க., சார்பில் வெற்றி பெற்ற அமைச்சர் பிரபு, காங்கிரஸ் குடும்பத்தை சேர்ந்தவர் தான். சிதம்பரம் நடத்திய காங்கிரஸ் ஜனநாயக பேரவை என்ற கட்சியின் மாவட்ட செயலராக, அமைச்சர் பிரபுவின் தந்தை துரை கருணாநிதி இருந்தார். அதனால் தான், காங்கிரஸ் ஓட்டுகள் த.வெ.க.,வுக்கு சென்று, 46,000 ஓட்டு வித்தியாசத்தில், அவர் வெற்றி பெற முடிந்தது. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

## 500 மின்சார பேருந்து கொள்முதல் டெண்டர் ரத்து!



சென்னை, ஜூன். 24–
கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சென்னை மாநகரப் போக்குவரத்திற்காக 500 மின்சார பேருந்துகளை வாங்குவதற்கும், அதற்கான உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும் சர்வதேச அளவில் டெண்டர் கோரப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், தி.மு.க. ஆட்சியில் கோரப்பட்ட டெண்டரை ரத்து செய்து தமிழக அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

நிதி இழப்பை ஏற்படுத்தும் என மதிப்பிடப்பட்டதால் டெண்டர் ரத்து செய்யப்படுவதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தி.மு.க. எதிர்ப்பை கைவிட்ட பழனிசாமி!



சென்னை, ஜூன். 24–
தி.மு.க., எதிர்ப்பை, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி குறைத்துள்ளது, கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக அரசியல் வரலாற்றில் கடந்த 50 ஆண்டுகளாக தி.மு.க.,வும், அ.தி.மு.க.,வும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தன. இதனால், இரு கட்சியினரும் ஒருவரை ஒருவர் சரமாரியாக விமர்சித்து வந்தனர். இந்த முறை, தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்த பின், இந்த நிலை மாறி உள்ளது.

தற்போது, சட்டம் – ஒழுங்கு, பாலியல் குற்றங்கள், மின்வெட்டு பிரச்னை குறித்து ஆளுங்கட்சியான த.வெ.க.,வுக்கு எதிராக, அறிக்கை விடும் பழனிசாமி, முந்தைய ஆட்சியாளரான தி.மு.க., குறித்து, எதுவும் சுட்டிக்காட்டவில்லை.

இதுகுறித்து, அ.தி.மு.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: அ.தி.மு.க.,வில் இருந்து ஆட்களை துாக்குவதால், த.வெ.க., மீது பழனிசாமி கடும் கோபமாக இருக்கிறார். அதன் காரணமாக, த.வெ.க., அரசின் தவறுகளை ஆவேசமாக சாடுகிறார். ஆனால், த.வெ.க., அரசு இன்று சந்திக்கும், சட்டம் – ஒழுங்கு பிரச்னை, மின்வெட்டுக்கு, முந்தைய தி.மு.க., அரசும் ஒரு வகையில் காரணம்.

அதற்காக, அ.தி.மு.க.,வை மூன்றாம் இடத்துக்கு தள்ளிய, தி.மு.க., –– த.வெ.க.,வை ஒன்றாக பழனிசாமி விமர்சிக்க வேண்டும். ஆனால், தி.மு.க.,வை விமர்சிப்பதை, பழனிசாமி தவிர்த்து விடுகிறார்.

குறிப்பாக, மேகதாது அணை தொடர்பாக, சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானத்தில், திருத்தம் கொண்டு வர காரணமாக இருந்ததே தி.மு.க.,தான். அந்த இடைச்செருகல் தீர்மானத்தை எதிர்த்து பேசியபோதும், அதற்கு காரணமான தி.மு.க.,வை பழனிசாமி விமர்சிக்கவில்லை.

ஆளுங்கட்சியை தான் விமர்சிக்க வேண்டும் என்ற அவரது முடிவு சரிதான். ஆனால், மேகதாது போன்ற தமிழகத்தின் நீண்டகால பிரச்னைக்கு கூட, தி.மு.க.,வை இழுக்காமல் பேசுவது சரியல்ல.

பழனிசாமி இதுவரை வெளியிட்ட அறிக்கையில், 99 சதவிதம் தி.மு.க.,வின் பெயர் கூட இடம்பெறவில்லை. குறிப்பாக, அறிக்கை தயார் செய்வோருக்கும், த.வெ.க.,வை மட்டும் விமர்சித்தால் போதும் என, கறார் உத்தரவு போட்டிருக்கிறார்.

ஏற்கனவே, தி.மு.க.,வுடன் கூட்டணி அமைத்து, ஆட்சி அமைக்க பழனிசாமி முயன்றதாக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் குற்றம்சாட்டி வருகிறார். அது உண்மைதான் என்பதுபோல், பழனிசாமியின் செயல்பாடு உள்ளது.

தி.மு.க., எதிர்ப்பினால்தான் அ.தி.மு.க., வளர்ந்து, பல முறை ஆட்சி அமைத்தது. 'தீயசக்தி தி.மு.க.,' என்ற வார்த்தையை உருவாக்கியதே அ.தி.மு.க., தான். ஆனால், அதை சொல்லி சொல்லியே சட்டசபை தேர்தலில் விஜய் வெற்றி பெற்றிருக்கிறார். இந்நிலையில், தி.மு.க., எதிர்ப்பை கைவிடுவது, அ.தி.மு.க.,வுக்கு நல்லதல்ல. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## அரசு டாக்டர்கள் தனியாக தொழில் செய்யக்கூடாது!



புதுடெல்லி, ஜூன். 24–
அரசு டாக்டர்கள் தனியாகத் தொழில் செய்யக்கூடாது என்ற கருத்தை சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள மோதிலால் நேரு மருத்துவக் கல்லூரி மற்றும் ஸ்வரூப் ராணி நேரு ஆஸ்பத்திரியின் அவலநிலை குறித்து அலகாபாத் ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு நிலுவையில் உள்ளது. அங்குள்ள அரசு டாக்டர் ஒருவர், தடையை மீறி தனியார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை அளிப்பதாகக் கூறி இந்த வழக்கு முதலில் தொடங்கப்பட்டது.

பின்னர் அங்குள்ள பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தனியார் நர்சிங் ஹோம்களில் பணிபுரிந்து வருவதாகவும், அரசு ஆஸ்பத்திரியில் இருந்து நோயாளிகள் தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்படுவதாகவும் ஐகோர்ட்டு கடந்த மே 4–ந் தேதி கவலை தெரிவித்திருந்தது.

அரசு போதுமான நிதி மற்றும் வசதிகளை வழங்கிய போதிலும், டாக்டர்களின் இத்தகைய செயல்பாடுகளாலேயே அந்த அரசு ஆஸ்பத்திரியின் நிலைமை மோசமடைந்து உள்ளதாக ஐகோர்ட்டு சுட்டிக்காட்டியது. மேலும் தனியாகத் தொழில் செய்யும் அரசு டாக்டர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், இதுகுறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடவும் ஆணையிட்டது.

இந்த விசாரணைக்கு தடை விதிக்கக்கோரி, அந்த மருத்துவக் கல்லூரியின் அறுவை சிகிச்சைத் துறை இணைப் பேராசிரியர் டாக்டர் சந்தோஷ் குமார் சிங் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் பி.வி.நாகரத்னா மற்றும் ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், ஐகோர்ட்டு உத்தரவில் தலையிட தாங்கள் விரும்பவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

அப்போது நீதிபதி பி.வி.நாகரத்னா கூறுகையில், "ஐகோர்ட்டு ஒரு பெரிய பொதுநலன் சாா்ந்த விஷயத்தைக் கையாண்டு வருகிறது. அரசு டாக்டர்கள் தனியாகத் தொழில் செய்யக்கூடாது என்ற இந்த நோக்கம் மிகவும் நல்லது. நீங்களும் ஒரு டாக்டர் தான். இந்த நடவடிக்கைகள் தனிப்பட்ட முறையில் உங்கள் மீது மட்டும் எடுக்கப்பட்டவை அல்ல. தனியாகத் தொழில் செய்யும் அனைத்து அரசு டாக்டர்களுக்கும் எதிரானதுதான்" என்று குறிப்பிட்டார்.

சுப்ரீம் கோர்ட்டு தனது மனுவை நிராகரிக்கப் போவதை உணர்ந்த மனுதாரரின் மூத்த வக்கீல் பிரதாப் சர்மா, மனுவைத் திரும்பப் பெற அனுமதி கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மனுவைத் திரும்பப் பெற அனுமதித்தனர்.

## கல்பாக்கம் அருகே பள்ளி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை!

செங்கல்பட்டு, ஜூன். 24–
செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கம் பகுதி கிராமத்தை சேர்ந்த 14 வயதுடைய சிறுமி தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 7–ம் வகுப்பு படித்து வருகிறார். வீட்டில் பாத்ரூம் வசதி இல்லாததால் சிறுமி தினமும் அதிகாலையில் அங்குள்ள வயல் வெளியில் காலைக்கடன் கழிக்க செல்வது வழக்கம்.

இதனை காரைத்திட்டு பகுதியை சேர்ந்த தனியார் பொறியியல் கல்லூரி மாணவர் மகேஸ்வரன் (வயது20),



அவரது நண்பர் அஜய் (27) ஆகிய 2 பேரும் நோட்டமிட்டு வந்தனர்.

சம்பவத்தன்று அதிகாலை சிறுமி காலைக் கடன் கழிக்க சென்றபோது மகேஸ்வரன், அஜய் ஆகியோர் சிறுமியை பின் தொடர்ந்து வந்தனர். இதனை கவனித்துவிட்ட சிறுமி கூச்சல் போட்டார்.

உடனே 2 பேரும் அந்த சிறுமியை மிரட்டி அவரது வாயில் துணியை அடைத்து வலுக்கட்டாயமாக கடத்தி அருகில் உள்ள வீட்டு மொட்டை மாடிக்கு தூக்கி சென்றனர். அங்கு இருவரும் மாறி மாறி அந்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.


எனினும் சிறுமி அவர்களின் பிடியில் இருந்து விடுபட போராடினாள். உடனே சிறுமியை தலையில் கட்டையால் தாக்கிவிட்டு 2 பேரும் அங்கிருந்து தப்பி ஓடினர். இதற்கிடையில் வெளியில் சென்ற மகள் வெகு நேரமாகியும் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த அவரது தந்தை அவரை தேடி வயல்வெளி பகுதிக்கு சென்றார். அப்போது அவ்வழியாக சென்றவர்கள் உங்கள் மகள் இந்த வழியாகத்தான் சென்றார் என கூறினர். சந்தேகம் அடைந்து அருகில் இருந்த வீட்டின் மொட்டை மாடிக்கு சென்று பார்த்தபோது அந்த சிறுமி அலங்கோலமாக மயக்க நிலையில் கிடந்ததை கண்டு பதறியபடி அவரை செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பின்னர் இது குறித்து நடவடிக்கை எடுக்க கோரி மாமல்லபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தந்தை புகார் கொடுத்தார்.

புகாரின் அடிப்படையில் காரைத்திட்டு பகுதியில் ஒரு இடத்தில் பதுங்கி இருந்த மகேஸ்வரன், அஜய் இருவரையும் போலீசார் போக்சோ சட்டத்தில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மகேஸ்வரன் திருக்கழுக் குன்றத்தில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் பொறியியல் 3–ம் ஆண்டு படித்து வருகிறார். அஜய் மரக்காணத்தில் உள்ள இறால் பண்ணையில் கூலி வேலை செய்து வருகிறார். தீவிர விசாரணைக்கு பின்னர் இருவரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

## நான் பேசினாலே பிரச்சனை தான்... ரஜினி!



சென்னை, ஜூன். 24–
நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் நிறுவனம் தயாரிப்பில் நடிகர் ரஜினிகாந்த் நடிக்கும் 173வது பட அறிவிப்பு சென்னையில் நடந்தது. படத்திற்கு தர்மன் என பெயரிட்டுள்ளனர். அஸ்வத் மாரிமுத்து இயக்குகிறார். சிம்ரன், ராஷி கண்ணா முக்கிய வேடத்தில் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்கிறார்.

பட விழாவில் ரஜினி பேசியதாவது:

நான் பேசினாலே பிரச்னை தான். அது எனக்கும் பிரச்னை, உங்களுக்கும் பிரச்னை. பேசாமல் இருந்தால் இவர் வாயில் கொழுக்கட்டை இருக்கிறதா என்பார்கள். பேசினால் இதோ பேசிட்டாரு என அதற்கும் ஒரு பிரச்சனை செய்வார்கள். ரொம்ப நாள் கழித்து தான் தெரிந்தது. நம்மை பிடிக்காதவர்களுக்கு நாம் எது செய்தாலும் பிடிக்காது. நம்மை பிடித்தவர்களுக்கு நாம் செய்யும் எல்லாமும் பிடிக்கும் என நினைப்பது முட்டாள்தனம்.

இந்த படத்திற்கு நான்காவது இயக்குனர் அஸ்வத். முதலில் ரவிக்குமார் இயக்குவதாக இருந்தது. பின்னர் சுந்தர் சி, அதன்பிறகு சிபி சக்கரவர்த்தி என மாறி கடைசியாக அஸ்வத் இயக்க உள்ளார். சிபி சொன்ன கதை பிடித்திருந்தது. ரொம்ப சென்சிட்டிவ் சப்ஜெக்ட். அணு விஞ்ஞானி சம்பந்தப்பட்ட படம், அது கொஞ்சம் டைம் ஆகும் என்பதால் தள்ளி வைச்சுட்டோம்.

கதையை நான் கேட்கல, நீங்களே கேட்டு சொல்லுங்க என கமல் சொன்னார். படத்தில் எல்லா பொறுப்புகளையும் கமல் என்னிடம் கொடுத்துவிட்டார். அதுவே கொஞ்சம் பயமாக இருந்தது. இந்த கதையெல்லாம் வேண்டாம் கமல், நீங்களும் கதை கேட்டு ஓகே சொல்லுங்க என்றேன்.

அஸ்வத் மீது பெரிய பொறுப்பு இருக்கு. அதற்காக அவரை மட்டும் சொல்லவில்லை. இது ஒரு கூட்டு முயற்சி. படம் நன்றாக வரும் என்ற நம்பிக்கை உள்ளது. அவரின் டிராகன் படம் பிடித்திருந்தது. அதில் நல்ல மெசேஜ் இருந்தது.

கமல் உடனான நட்பு பற்றி சொல்லவே தேவையில்லை. 1975களில் கமல் பெரிய ஸ்டார். நான் அந்த சமயம் தான் வந்தேன். 'இளமை ஊஞ்சலாடுகிறது' படம் கமலால் தான் பண்ணினேன். அதில் முதலில் ஜெய் கணேஷ் நடிக்க வேண்டியது. கமல் தான் நான் நடிக்க வேண்டும் என ஸ்ரீதரிடம் பேசி நடிக்க வைத்தார். படத்தில் நான் செய்த மேனரிசங்களை பாராட்டியவர் கமல். அவர் செய்த உதவியாகட்டும், ஊக்கமாகட்டும் சொல்ல முடியாதவை".

இவ்வாறு ரஜினி பேசினார்.

## கவியரசுக்கு புகழஞ்சலி..!

கவியரசு கண்ணதாசன் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளில் வணங்குகிறேன்..!
பிறந்தநாளில் மாத்திரம் நினைத்து...!
பிற நாட்களில் மறந்து விடும் 'பாடலையா' தந்தாய்...!
மனிதன் படும் 'பாட்டையல்லவா படைத்தாய்'...!
வாழ்க உமது புகழ்...!



முனைவர் **வைகைச்செல்வன்**
முன்னாள் அமைச்சர்



Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020